பக்கங்கள் : எட்டு+II

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 01 திங்கட்கிழமை (17.07.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 231



விடுதலைப் புலிகளின் முதல் கட்டளைத் தளபதி லெப்.சீலனின் 23ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் சீலனின் உருவப் படத்திற்கு மாலை அணிவிப்பதை முதலாவது படத்திலும் முதுநிலை அதிகாரிகளுக்கான பீரங்கி ஒருங்கிணைப்பு பயிற்சியைப் பெற்ற போராளிகள் இருவருக்கு முறையே சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# வடக்கில் இராணுவத் தயார் நிலையை கோட்டாபய நேரில் வந்து மதிப்பீடு!

## முன்னரங்கப் பாதுகாப்புக் குறித்தும் களத் தளபதிகளோடு கூடி ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஜூலை17

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோட்டாபய ராஜபக்ஷ முப்படைத் தளபதிகள் மற்றும் பரிவாரங்கள் சகிதம் யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இங்குள்ள இராணுவத்தின் தயார் நிலையை நேரில் மதிப்பீடு செய்தார்.

பதற்றம் நிலவும் முன்னரங்கப் பகுதிகளுக்கும் நேரில் சென்று பார்வையிட்ட அவர், அங்கு களத்தில் உள்ள தளபதிகளோடு பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடினார்.

கொழும்பிலிருந்து இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் அடங்கிய அணி ஒன்றுடன் புறப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் சனிக்கிழமை விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

பலாலி இராணுவ விமானத் தளத்தில் வந்து இறங்கிய அவரையும் அவரது குழுவினரையும் யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி வரவேற்றார். அங்கு யாழ்.மாவட்டப் படைத் தளபதியுடனும் படைப் பிரிவுகளின் தளபதிகளுடனும் பாதுகாப்பு நிலைவரம் குறித்து கோட்டாபய விரிவான ஆலோசனை நடத்தி

(8ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் உத்தியோகத்தரின் உறவினர்கள் கிளிநொச்சிக்கு

கொழும்பு, ஜூலை17

தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டிருக்கும் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பந்துஜீவ வோப்பிற்றியக் ஹொடவை விடுதலை செய்யுமாறு அவருடைய உறவினர்கள் வேண்டுகொள் விடுத்துள்ளனர். அத்துடன் அவரை நேரில் பார்ப்பதற்காக உறவினர்கள் நேற்று கிளிநொச்சிக்குப் புறப்பட்டுள்ளனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## ரயில் மோதி தந்தை, மகன் பலி!

கொழும்பு, ஜூலை 17

பேருவளைப் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ரயில் - மோட்டார் சைக்கிள் விபத்தில் தந்தையும் மகனும் உயிரிழந்துள்ளனர்.

பாதுகாப்பற்ற ரயில் கடவை ஒன்றை மோட்டார் சைக்கிள் கடக்க முற்பட்டவேளையே

(8ஆம் பக்கம் பார்க்க)

## கட்டார் விமானத்தில் குண்டுப் புரளி!

கொழும்பு,ஜூலை17

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நேற்றிரவு கட்டார் நாட்டுக்குப் புறப்படவிருந்த விமானத்தில் குண்டு இருப்பதாக வந்த தகவலையடுத்து அங்கு பெரும் அல்லோலகல்லோலம் ஏற்பட்டது.

'கட்டார் எயார் வேய்ஸ்' நிறுவனத்துக்குச் சொந்தமான இந்த விமானம் பயணிகளை ஏற்றிக்கொண்டு நேற்றுமுன்னிரவு 7.30 மணியளவில் புறப்பட ஆயத்தமான வேளை அந்த வெடிகுண்டு வைக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் அநாமதேய தொலைபேசி அழைப்பு ஊடாக விமான நிலையத்துக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. விமானம் எந்த வேளையிலும் வெடித்துச் சிதறும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலையில் நேற்று இளைஞர்கள் மூவர் கலைத்துக் கலைத்து வெட்டிக் கொலை!

### சட்டவிரோத மணல் அகழ்வு விவகாரம் பெரும் மோதலில் முடிவு

கொழும்புத்துறை,ஜூலை17

அரியாலை சித்திவிநாயகர் ஆலயத்துக்கு தெற்கு வீதிப் பகுதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் மூன்று இளைஞர்கள் கலைத்துக் கலைத்து வெட்டியும் குத்தியும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கொய்யாத்தோட்டம் புதுவீதியைச் சேர்ந்த அன்ரன் டென்சிங் (வயது 22), புதுக்குடியிருப்பு, பாஷையூரைச் சேர்ந்த ஜோசப் யூத்சன் (வயது 21), பாஷையூரைச் சேர்ந்த பாக்கியராஜா அருள்ராஜா (வயது 21) ஆகியோரே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அரியாலைக்கு சென்ற பிரஸ்தாப மூன்று நபர்களையும் அந்தப் பகுதியைச் சேர்ந்த இனந்தெரியாதவர்கள் கலைத்துக்கலைத்து வெட்டியும், கத்தியால் குத்தியும் படுகொலை செய்துள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து அங்கு பதற்றம் நிலவியது. அப்பகுதிக்குச் சென்ற யாழ். மாவட்ட பதில் நீதிவான் க.கேசவன் விசாரணைகளை நடத்தி சடலங்களை யாழ்.வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

கொழும்புத்துறை மற்றும் அரியாலைப் பகுதிகளில் நீண்டகாலமாக சட்டவிரோதமாக மணல் அகழ்ந்துவரும் குழுக்களுக்கும் அதனைத் தடுக்க முயன்றுவரும் பிரதேச மக்கள் குழுக்களுக்கும் இடையிலான பகைமையே இந்த வாள் வெட்டுச் சம்பவத்தின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அண்ணனும் தம்பியும் சுட்டுப் படுகொலை! பருத்தித்துறை நகரில் நேற்றுக் கொடூரம்!!

வடமராட்சி, ஜூலை 17

பருத்தித்துறை நகரில் பஸ்நிலையப் பகுதிக்கு நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுதபாணி ஒருவர் சரமாரியாகச் சுட்டத்தில் சகோதரர்களான ஓட்டோ சாரதிகள் இருவர் உயிரிழந்தனர்.

தங்கள் ஓட்டோவை தரிக்க விட்டு அதில் அமர்ந்தவாறு உரையாடிக்கொண்டிருந்த அண்ணனும், தம்பியுமான சகோதரர்கள் இருவருமே இவ்வாறு கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

மோட்டார் சைக்கிளில் மின்னல் வேகத்தில் வந்த கொலையாளி இருவரை நோக்கியும் சுட்டுவிட்டு தப்பிச் சென்றார் என்று கூறப்படுகிறது.

பருத்தித்துறைநகரில் பஸ்நிலையம் அருகே - மகாத்மா சிலைக்குப் பக்கத்தில் - காலை 8.40 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## பள்ளிமுனை, பேசாலை கடற்பரப்பில் பகல்நேர மீன்பிடிக்கு இன்றுமுதல் அனுமதி

### பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தம்

மன்னார்,ஜூலை17

மன்னார் மாவட்டத்தின் பள்ளிமுனை மற்றும் பேசாலை கடற்பரப்பில் பகல் நேரம் மீன் பிடிக்க இன்று முதல் அனுமதிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முடிவை அடுத்து, இன்று முதல் மேற்கொள்ளப்படவிருந்த பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பள்ளிமுனை பேசாலை கடற்பரப்பில் கடந்த ஒருமாதமாக மீன் பிடிக்க கடற்படையினர் தடை விதித்திருந்தனர்.

இந்தத் தடையை ரத்துச் செய்யக் கோரி இன்று முதல் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளப்போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் -

மீனவர் பிரச்சினை குறித்து ஆராய மன்

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஈழம் என்றால் புலிகள்; புலிகள் என்றால் ஈழம் இதுவே தமது நிலைப்பாடு என்கிறார் திருமாவளவன்

சென்னை,ஜூலை17

ஈழம் என்றால் புலிகள்; புலிகள் என்றால் ஈழம் என்பதே எமது நிலைப்பாடு.

இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன்.

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற "பொடா" எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருமாவளவன் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் தொடர்ச்சியாக தொடர் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தியாவின் நாடாளுமன்றம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தியாவின் இதயப் பகுதியான மும்பையில் தொடர் வண்டிகளிலே குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் உளவுத்துறையால் இக் குண்டுவெடிப்பை தடுக்க முடியவில்லை. சொநத நாட்டுக்குரிய பாதுகாப்பைச் செய்ய முடியாத இந்தியா, சிங்கள தேசத்துக்குப் போய் ராடர் கருவிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. சென்னை தாம்பரம் விமானப்படைத் தளத்தில் சிங்களவர்களுக்கு பயிற்சி அளிக்கிறார்கள். முதலில் தனது நாட்டின் பாதுகாப்பிலே இந்தியா கவனம் செலுத்தட்டும்.

"பொடா" சட்டம் கண்டு அஞ்சுகிறவர்கள் அல்ல நாம். பொடா சட்டத்திலே கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட காலத்திலேயே புலித் தேசத்துக்குப் போய் வந்தவன் நான். தேர்தல் அரசியல் மாறுபாடுகளைக் கடந்து தமிழ்த் தேசிய பிரச்சனையில் அனைவரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் - என்றார்.

### 914 நாள்களுக்குப் பின்னர் பேசினார் நெடுமாறன்

இக்கூட்டத்தில் "பொடா" வழக்குகள் திரும்பப் பெறப்பட்ட நிலையில் 914 நாள்களுக்குப் பின்னர் முதல் முறையாக பொதுக்கூட்டத்தில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் உரையாற்றினார்.

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச்செயலாளர் பெ.மணியரசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் செயலாளர் வே.ஆனைமுத்து, பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை கராசேந்திரன், தமிழ் தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு, பேராசிரியர்கள் சரசுவதி, ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் பேராசிரியர் செந்தியதிபன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

கோப்பாய்,ஜூலை17

நாளை நடைபெறவிருந்த கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் விவசாயக் குழுக் கூட்டம் ஆகியன தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன எனப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (72)

## அனுராதபுரத்தில் கைக்குண்டுகள் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூலை 17

அனுராதபுரம் ஹொரவபத்தான பகுதியில் இரண்டு கைக்குண்டுகளைப் பொலிஸார் கண்டுபிடித்திருக்கின்றனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவல் ஒன்றை அடுத்து வீதியோர மதகு ஒன்றினுள் இருந்து இரண்டு கைக் குண்டுகளையும் பொலிஸார் மீட்டனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்தது.

மீட்கப்பட்ட இரண்டு கைக்குண்டுகளும் குண்டு செயலிழக்கச் செய்யும் படைப் பிரிவினரால் அழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஜே.வி.பியின் நந்தன குணதிலகவை தம் பக்கம் வளைக்கிறார் ஜனாதிபதி?

கொழும்பு, ஜூலை17

ஜே.வி.பியின் சிரேஷ்ட பிரமுகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நந்தன குணதிலகவிற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாணந்துறை தொகுதி அமைப்பாளர் பதவியை வழங்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆலோசித்து வருகிறார் என்று ஜனாதிபதியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் கூறின.

ஜே.வி.பி உறுப்பினரான நந்தன குணதிலக்க கடந்த வார இறுதியில் ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தினார். தற்போதைய அரசியல் சூழ்நிலை மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து இந்தப் பேச்சின்போது ஆராயப்பட்டது.

இதர கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரசுடன் இணைந்துவரும் நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக்க உட்பட்ட ஜே.வி.பி உறுப்பினர்களும் அரசுடன் இணைந்து அரசைப் பலப்படுத்தலாம் என்ற சாரப்பட ஜனாதிபதி அப்போது வினாவியுள்ளார்.

இதன்போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாணந்துறை தொகுதி அமைப்பாளர் பதவியை நந்தன குணதிலக்க எம்.பி கோரியிருக்கிறார் என்று தெரிகிறது. அவரின் இந்தக் கோரிக்கையை ஜனாதிபதி பரிசீலித்து வருகிறார் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

# ஐ.தே.கட்சிக்குள் ஓர் அணியைத் திரட்டி சுயாதீனக்குழுவை அமைக்க முயற்சி?

கொழும்பு, ஜூலை17

ஐக்கிய தேசியக் கட்சியில், தலைமையுடன் முரண்பட்டு நிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து சுயாதீனமாகச் செயற்படும் குழுவொன்றை உருவாக்கும் நடவடிக்கையில் ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் ஈடுபட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

இது தொடர்பாக ஏற்கனவே பல சுற்றுப் பேச்சுகளும் நடந்து முடிந்துள்ளன என்று கூறப்படுகிறது.

கட்சி மறுசீரமைப்பு விவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பல்வேறு கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு கருத்து முரண்பாடுகள் கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் குழுவை உருவாக்குவதற்கும், அந்தக் குழுவின் தார்மீக ஆதரவை தேவைப்படும் வேளைகளில் அரசுக்கு வழங்குவதற்கும் ஆலோசிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.தே.க. சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்படும் இந்த செயற்பாடு குறித்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் கட்சித் தலைமையிடம் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

இவர்கள் தொடர்பாக கடும் நடவடிக்கைகளை எடுப்பதற்குத் ஐ.தே.க. தலைமை தீயாராகி வருகிறது என்று கட்சியின் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

# பாதாள உலகக் குழுவின் முக்கிய புள்ளி தெஹிவளையில் துப்பாக்கியுடன் கைது!

கொழும்பு, ஜூலை 17

பாதாள உலகத்தின் மிக முக்கிய புள்ளி ஒருவரை விசேட புலனாய்வுப் பொலிஸார் நேற்று தெஹிவளையில் வைத்து கைது செய்துள்ளனர்.

இவரிடமிருந்து ரி.56ரக துப்பாக்கியும், 9 எம்.எம். துப்பாக்கிகள் இரண்டும், நான்கு கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இவரைக் கைதுசெய்வதற்காக பொலிஸார் நீண்ட நாள் தேடுதல் நடத்தி வந்தனர்.

இந்நிலையில் தெஹிவளையிலுள்ள வீடொன்றில் அவர் பதுங்கியிருக்கிறார் எனக் கிடைத்த தகவலையடுத்து புலனாய்வு பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

பொலிஸாரைக் கண்டு இந்த நபர் தப்பியோடுவதற்கு முயன்றார். ஆனால் பொலிஸார் இவரை மடக்கிப் பிடித்தனர். இவர் வழங்கிய தகவலின்பேரில் மேலும் பல பாதாள உலகப் புள்ளிகள் கைது செய்யப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



'ஜாதிக்க சவிய' எனும் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் வன்னி மாவட்டத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன், வடக்கு-கிழக்கு ஆளுநர் றியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம, பதில் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராச்சி, ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ உட்பட்ட பிரமுகர்கள் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

# திருமலையில் படைமுகாம் மீது ஷெல் வீழ்ந்து சிப்பாய் பலி!

திருமலை, ஜூலை17

திருகோணமலை செல்வாநகரில் உள்ள படைமுகாம் மீது நேற்றுக்காலை 7.45 மணியளவில் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு சிப்பாயும் பொதுமகன் ஒருவரும் காயமடைந்தனர்.

விடுதலைப் புலிகளே 81 மி.மி. மோட்டார் ஷெல் கொண்டு இத்தாக்குதலை நடத்தினர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்தது.

காயமடைந்த சிப்பாயும், பொதுமகனும் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். படையினர் தற்காபபுக்காக திருப்பித் தாக்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)







தியாகி அறக் கொடை நிலையத்தின் 'வைகறை' நூல் வெளியீட்டு விழாவும், அறக் கொடை வழங்கும் நிகழ்வும் நேற்றுமாலை நல்லூர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. (செய்தி 3ஆம் பக்கத்தில் - படங்கள்:தமிழினியன், நேசன்)

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
New way of Flying
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T: 021 222 6242
021 2223984
Fax: 021 222 5600
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979

யாழ் - கொழும்பு விமான சேவை

# சின்னமடு பெருவிழா குறித்த கூட்டம்

கத்தோலிக்கர்களின் யாத்திரைத் தலங்களில் ஒன்றான ஊர்காவற்றுறை சின்னமடு மாதா தேவாலயத்தின் வருடாந்த பெருவிழா தொடர்பான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் நாரந்தனை பங்குத் தந்தை, போக்குவரத்துச் சபை அதிகாரிகள், பிரதேச சபை அதிகாரிகள் தொண்டர் அமைப்புக்களின் அலுவலர்கள் மற்றும் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். மேற்படி ஆலயத்தின் வருடாந்த பெருவிழாக்களில் குடாநாட்டின் பலவேறு பகுதிகளையும் சேர்ந்த யாத்திரிகர்கள் பலர் கலந்துகொள்ளவது தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# தொடர்ந்து தவறு இழைக்கும் தென்னிலங்கை ஊடகங்கள்

இலங்கை இனப்பிரச்சினை மிக மோசமான ஒரு கட்டத்தை அடைந்தமைக்கும் அந்தப்பிணக்குக்கு ஓர் இணக்கமான - அமைதி வழி- தீர்வுகாண முடியாமல் இருக்கின்றமைக்கும் பிரதானமான காரணங்களுள் ஒன்று வெகுஜன ஊடகங்கள் ஏற்படுத்துகின்ற குழப்பமாகும் என்கின்ற குற்றச்சாட்டு பரவலாகவே நிலவி வருகின்றது.

இவ்விடயத்தில் தென்னிலங்கை ஊடகங்கள் பெரும்பான்மையினரான சிங்கள மக்களை எவ்வாறு தவறாக - வேண்டுமென்றே - திசை திருப்பி நிலைமையை மோசமடைய வைக்கின்றன என்பதை இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளோம். மீண்டும் ஒரு முக்கிய விடயத்தில் அவற்றின் செயற்பாட்டை விமர்சிப்பது இப்போது தேவையாகின்றது.

கடந்த வாரத்தில் இனப்பிணக்குத் தொடர்பான விவகாரத்தில் இடம்பெற்ற - குறிப்பிடத்தக்க - ஒரு வகையில் மோசமான - சம்பவம் மட்டக்களப்பு வீரகனேரி மோதலாகும்.

கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து வெளியான தகவல்களை - உண்மைச் செய்திகளை - வேண்டுமென்றே மூடிமறைக்காமல் தென்னிலங்கை ஊடகங்கள் அப்படியே வெளிப்படுத்தியிருக்குமானால் இன்றைய இக்கட்டு நிலைக்கான அடிப்படைகளை - யதார்த்தங்களை - மெய்யுண்மை நிலையை - தென்னிலங்கைச் சிங்கள மக்கள் ஓரளவுக்கேனும் புரிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்திருக்கும். ஆனால் அதை வேண்டுமென்றே பக்கச்சார்பாக மூடி மறைத்து, குட்டையை மேலும் குழப்பி, தமிழர்கள் மீது - புலிகள் மீது - பெருங்குரோதம் தென்னிலங்கை மக்களுக்கு மேலும் வளர வழி செய்து கொடுத்துள்ளன அவை.

அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் தேடுதல் மற்றும் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது பெரும் தாக்குதல் ஒன்றைத் தொடுத்து அவர்களில் பலரைப் புலிகள் கொன்றொழித்து விட்டனர், டசினுக்கும் அதிகமானோர் காணாமல் போய் விட்டனர் என்றுதான் பல தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அத்தோடு, படையினரின் பதில் தாக்குதல்களில் பல புலிகள் உயிரிழந்து விட்டனர் என்றும் செய்தியை வெளியிட்டு சில சிங்கள, ஆங்கில ஊடகங்கள் தம்மைத் தாமே திருப்திப்படுத்திக்கொண்டன.

சில ஊடகங்கள் இதற்கு சற்று மேலேபோய், தமது பிரதேசத்துக்குள் ஊடுருவிய படையினர் மீதே தாங்கள் தாக்குதல் தொடுத்தனர் எனப் புலிகள் கூறுகின்றனர் என்றும், ஆனால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள்தான் இத்தாக்குதல் நடந்தது என இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார் என்றும் செய்தி வெளியிட்டுச் சமாளித்தன.

ஆனால் இதற்குமேல் உண்மையைக் கண்டறிந்து நிலைமையைத் தெளிவுபடுத்த அவற்றுக்கு விருப்பமேயில்லை.

புலிகளின் பிரதேசத்திற்குள் ஊடுருவிய இராணுவ அணி மீதுதான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்ற உண்மையை சிங்கள மக்களுக்குத் தெரிவிக்க - தெளிவுபடுத்த - எந்தத் தென்னிலங்கை ஊடகத்துக்கும் நெஞ்சுரம் இல்லை.

''நாங்கள் புலிகளுடைய கட்டுப்பாட்டுப் பிரதேசம் என வழமையாகக் கருதும் இடத்தில்தான் இந்த மோதல் நடைபெற்றிருக்கின்றது.'' - என கொழும்பிலிருந்து வெளியாகும் ஒரு பிரபல ஆங்கில வார இதழ் செய்தியாளருக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஜி. ஓமர்ஸன் தெளிவாகத் தெரிவித்தமையையும்-

அதை அப்படியே அந்தச் செய்தியாளர் தமது இதழுக்கு செய்தியாக்கிக் கொடுத்தமையையும்கூட உறுதிப்படுத்த முடிகிறது. ஆனால் அந்தச் செய்தியை அந்தப் பத்திரிகையின் அச்சு இதழில் காணவேயில்லை.

அந்த இதழில் மட்டுமல்ல, எந்தத் தென்னிலங்கை ஊடகத்திலும் அந்த உண்மை இதுவரை வெளிவரவேயில்லை.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்துக்குள் பெரிய எடுப்பில் படையினர் ஊடுருவினர். அவர்களின் தாக்குதலில் நான்கு புலிகள் உயிரிழந்தனர். அவர்கள் அப்படி சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரம் உள்ளே ஊடுருவி தங்களின் நான்கு போராளிகளைக் கொன்றுள்ளனர் என்பதைக் கண்காணிப்புக்குழுவுக்குத் தெரியப்படுத்தி எச்சரிக்கைச் செய்தி அனுப்பினார்கள் புலிகள். அந்த எச்சரிக்கை வழங்கப்பட்டு இரண்டு மணி நேரத்தின் பின்னரே புலிகள் தாக்குதல் நடத்தினர். அந்தத் தாக்குதலிலேயே பன்னிரண்டு படையினர் உயிரிழந்தனர்.- இவை புலிகள் தரப்புத் தகவல்கள்.

''இதுவரை காலமும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மறைமுகமாக ஊடுருவித் தாக்குதல் நடத்திவந்த இராணுவத்தினர் தற்போது பகிரங்கமாகவே - பலவந்தமாகவே - உள்ளே நுழைந்து வலிந்து தாக்குதல்களை நடத்துகின்றனர்''- என்று கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் நேரடியாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன்.

சரி. புலிகளின் தரப்புச் செய்திகளையும், தமிழ்ச்செல்வன் தெரிவித்த மேற்படி தகவல்களையும் பகிரங்கப்படுத்த உதவுவது புலிகளுக்கான பிரசாரமாகிவிடும் என்று தென்னிலங்கை ஊடகங்கள் கருதுமானால், அவற்றைப் பிரசுரிக்காமல் - அல்லது வெளியிடாமல் - விட்டிருக்கலாம்.

ஆனால், பன்னிரண்டு படையினர் அநியாயமாக-உயிரிழக்கக் காரணமான சம்பவம் எங்கு நடைபெற்றது என்பதை - அது தொடர்பாகத் தீர்ப்புக்கூறக்கூடிய தகுதியும், தகைமையும் உடைய- கண்காணிப்புக்குழுவின் முடிவைப்பெற்று வெளியிடுவதன் மூலம் தென்னிலங்கை மக்களுக்கு உண்மையைத் தெரியப்படுத்த - தெளிவுபடுத்த - வேண்டிய கடமை தென்னிலங்கை ஊடகங்களுக்கு உண்டு.

அதன்மூலம் இவ்வாறு பன்னிரு சிப்பாய்கள் உயிரிழக்கக் காரணமான பின்னணிகளை மட்டுமல்லாமல், பொதுவாகவே இந்த தேசியப்பிரச்சினை - பிணக்கு - எந்தத் திசையை நோக்கி நாட்டின் தலைவர்களாலும் படைத்தளபதிகளாலும் நகர்த்தப்படுகின்றது என்பதையும் அறிந்து கொள்வதற்கும் தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்கு வாய்ப்புக் கிட்டியிருக்கும்.

பன்னிரு சிப்பாய்கள் பலியான சம்பவம் பற்றிய செய்தியை ஒரு பக்கச் சார்பாகப் பிரசுரித்து, மறுபக்க உண்மையை மூடி மறைத்ததன்மூலம் தென்னிலங்கை மக்கள் மனதில் தமிழர்கள் தொடர்பாகக் குரோதத்தை விதைத்து மேலும் வளர்க்கும் தவறை மட்டுமல்லாமல் இத்தகைய தேசியப்பிரச்சினையை மேலும் மேலும் தவறான வழியில் சம்பந்தப்பட்டோர் வழிநடத்திச் செல்லவும் உதவி, ஒத்தாசை புரிந்துள்ளன இந்தப் பொறுப்புள்ள(?) தென்னிலங்கை ஊடகங்கள்.

இத்தகைய போக்கிலிருந்து தென்னிலங்கை ஊடகங்கள் திருந்தாத வரையில் தென்னிலங்கை மக்களுக்கு யதார்த்தம் புரியப்போவதில்லை. தென்னிலங்கைத் தலைவர்களும் தளபதிகளும் தொடர்ந்து தவறிழைப்பதிலிருந்து மீண்டு நீதி செய்யப் போவதில்லை. மொத்தத்தில் இலங்கைத் தீவுக்கு மீட்சி கிடைக்கப் போவதேயில்லை. இதுவே மெய்மை நிலை!

# கட்டடப் பொருள்களின் திடீர் விலையேற்றம்: திட்டங்களைப் பெறுப்பேற்க ஒப்பந்தகாரர் பின்னடிப்பு

கட்டடப் பொருள்களின் விலை அண்மையில் அதிகரித்துள்ளதால் பல வேலைத் திட்டங்களை எடுத்துச்செல்வதற்குக் கட்டட நிர்மாண ஒப்பந்தகாரர்கள் முன்வராததால் வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கட்டட நிர்மாண வேலைகள் மேற்கொள்வதற்குரிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உரிய திணைக்களங்களின் அங்கீகாரம் கிடைப்பதற்குள் கட்டடப் பொருள்களான சிமெந்து, கம்பி போன்றவற்றின் விலைகள் மளமளவென்று அதிகரித்துச் செல்வதால் இவ்வேலைகளை முன்னெடுப்பதற்கு அந்தந்தத் திணைக்கள நிறுவனங்களால் அறிவிக்கப்படும்போது கட்டட ஒப்பந்தகாரர் எவரும் அவ்வேலைகளை எடுத்துச் செல்வதற்கு முன்வருவதில்லை.

அத்துடன், எரிபொருள் விலைகளும் திடீர்திடீரென அதிகரிக்கப்படுவதால் கட்டட வேலைக்குப் பயன்படுத்தும் மணல், கற்கள் ஆகியவற்றின் விலைகளும் அதிகரித்துவருகின்றன.

திணைக்கள உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மாறாக சிமெந்து, கம்பி, மணல், கற்கள் போன்றவற்றின் விலைகள் உள்ளதால், கட்டட வேலைகளை எடுத்துச்செய்வதற்கு எவரும் முன்வராததால் பல கட்டட வேலைகளை ஆரம்பிக்கமுடியவில்லை எனவும் -

இதனால் இக்கட்டட வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி அந்தத் திணைக்களங்களால் மீளப்பெறும் அபாய நிலை உள்ளதாகவும் - சில திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (1-117)

## நவோதய வார நிகழ்வுகள்

கடந்த சனிக்கிமை தொடக்கம் எதிர், வரும் வெள்ளிக்கிழமை வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று சமய விழுமிய தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு அதிபர் செ.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஷ்பலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நாளை கணித தொழில்நுட்ப தினத்தை முன்னிட்டு அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.அருளானந்தம் கலந்துகொள்வார். (202-70)

# 'வைகறை' மலர் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை17

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் வெளியீடான 'வைகறை' எனும் மலர் வெளியீட்டுவிழா நேற்றுமுற் பகல் 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இளைப்பாறிய அதிபர் செல்வி அ.கந்தையா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் கலந்துகொண்டார்.

வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை லாவண்யா விஜயரகுநாதன் நூலை வெளியிட்டுவைக்க, முதற்பிரதியை மாநகரசபை ஆணையாளர் பெற்றுக் கொண்டார்.

பேராசிரியர் சி.சிவலிங்கராசா தனது ஆய்வுரையில்,

'இந்நூல் புலமும் புலத்திற்கு வெளியேயுமான இரு வாசகர் தளநிலைகளைக் கொண்டிருப்பதால், புலத்தில் நிகழும் பிரச்சினைகள் பல்வேறு தரப்பினரையும் சென்றடைய வாய்ப்புக் கிட்டும் - என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி மாணவர்கள் இருவருக்கு முச்சக்கர வண்டிகளும் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்கள் 20 பேருக்கு மாதாந்த கல்வி உதவிப் பணமும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், சமயப் பெரியார்கள், மனித நேய அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ரி-190)

# குருநகரில் முதியோருக்கு அடையாள அட்டை

மண்டைதீவு, ஜூலை17

குருநகர் பகுதியில் உள்ள ஜே/68 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட முதியோர் சங்க அங்கத்தவர்கள் அனைவருக்கும் முதியோர் அட்டையாள அட்டைகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை குருநகர் சென் றோக் சனசமூக நிலையமண்டபத்தில், யாழ். அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட முதியோர் சங்கங்களின் இணைப்பாளர் திருமதி எஸ்.பாலகுமாரி தலைமையில் நடைபெற்ற சங்கத்தின் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

மேலும், அடையாள அட்டைக்கான நிழற்படங்களை நாளை செவ்வாய்க் கிழமை எடுப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமகால அமைதியற்ற சூழ்நிலை காரணமாக முதியவர்கள் மன அமைதி குலைந்த நிலையில் இருப்பது கவனத்திற்கு எடுக்கப்பட்டு இவர்களது மனோ நிலையைச் சீர்ப்படுத்தி ஆற்றுப்படுத்துவதற்கு தீவகத்தில் உள்ள சாட்டிமாதா ஆலயத்திற்கு ஆன்மீக சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு தியான முயற்சியில் ஈடுபடுவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (1-88)

# கோயிலாக்கண்டி ராவளைக்குளத்தை புனரமைக்க மூன்று லட்சம் ரூபா ஒதுக்கீடு

தென்மராட்சி,ஜூலை17

தென்மராட்சி தெற்கு, கோயிலாக் கண்டி ராவளைக்குளமும் அதனுடன் இணைந்த வாய்க்காலும் மூன்று லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

இப்பிரதேச விவசாய சம்மேளனங்கள் இணைந்து புனரமைப்புப் பணியில் ஈடுபடவுள்ளன.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இக்குளமும் வாய்க்காலும் தூர்ந்து போய் காணப்படுவதால் மழை காலங்களில் வெள்ளம் குளத்திலிருந்து வெளியேறி அப்பகுதி வயல்களில் காலபோக நெற் செய்கையை அழித்துவருவதால் -

இக்குளத்தினை ஆழமாக்கவும் வாய்க்கால்களைப் புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (1-117)

# சிறுவர் பாதுகாப்பு அலுவலகம் சந்திரபுரத்தில் புதன் திறப்பு

தென்மராட்சி,ஜூலை17

மட்டுவில் சந்திரபுரத்தில் கிராமமட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு அலுவலகம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

சந்திரபுரம் கிராம அலுவலர் கு.பரமானந்தம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு அலுவலகத்தினைத் திறந்துவைக்கவுள்ளார்.

அறவழிப் போராட்டக் குழுவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள, பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பான செயற்றிட்டத்தின் கீழ் இந்த அலுவலகம் திறக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (117)

# சுனாமி பாதித்த வீட்டுரிமையாளருக்கென செஞ்சிலுவை அமைப்புகள் நிதியுதவி

கொழும்பு,ஜூலை17

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித்தரும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கென இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவை ஒன்றியம் மற்றும் செம்பிறை சங்கம் ஆகியவை இணைந்து ஒருகோடி அமெரிக்க டொலரை வழங்கியுள்ளன.

பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு உதவிவழங்கும் அரசாங்கத் திட்டத்தின் 2ஆம்கட்ட செயற்பாடுகளுக்கு இந்தப்பணம் பயன்படும். ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளான குறைந்தது 10 ஆயிரம் வீட்டு உரிமையாளர்கள் தமது வீடுகளை மீளக்கட்டிக் கொள்ள அல்லது திருத்தி அமைத்துக் கொள்ள இதனால் வசதியேற்படும்.

சர்வதேச செஞ்சிலுவை ஒன்றியத்தினால் உரிமையாளர் வீடமைப்புத்திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட இரண்டு கோடியே 50 லட்சம் அமெரிக்க டொலரில் ஒரு தொகுதியே மேற்படி நிதியாகும். இந்நிதி உலகவங்கியினால் நிர்வகிக்கப்படும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 4 தவணைகளில் இதிலிருந்து அரசாங்கத்தால் வர்த்தகவங்கிகளின் வழியாக பயனாளிகளுக்கு வழங்கப்படும். (ப)

## நாளை

ஆடி - 02
செவ்வாய்க்கிழமை
18.07.2006
திதி : அட்டமி
பிற்பகல்: 03.49
நட்சத்திரம் : அச்சுவினி
பின்னிரவு : 01.50
சுபநேரம் : 10.30 - 12.00
ராகுகாலம் : 03.00 - 04.30

## உதயவாக்கு

**உங்கள் கைகளில் உள்ள வலிமையை விட உங்கள் சிந்தனைகளில் உள்ள வலிமை மிக அதிகம். எனவே ஆழ்ந்து சிந்தியுங்கள்.**

*-கீரிஸ்.*

## ஆடிப்பிறப்பு

**இன்று ஆடிப் பிறப்பு. இதனையொட்டி இக் கவிதை பிரசுரமாகின்றது.**



ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக் குற்றிச் செந்நெற்
பச்சையரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டுநல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து.

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரிற் சர்க்கரை யுங்கலந்து
தோண்டியில் நீர்விட்டு மாவை யதிற்கொட்டிச்
சுற்றிக்கு ழைத்துத்தி ரட்டிக்கொண்டு.

வில்லை வில்லையாக மாவை கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளேயிட்டுப்
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பளே
பார்க்கப் பார்க்கப்பசி தீர்ந்திடுமே.

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டுமா வுருண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்கவா யூறிடுமே.

குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே
குத்துவிளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிள நீர்பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே.

வன்னப் பலாவிலை ஒடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளிவார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே.

வாழைப்பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் பழத்தை அறுத்துத்தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தந் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

**நவாலியூர் க.சோமசுந்தரப்புலவர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சி, ஜூலை17

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம்9தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான குணநல வட்டச் செயலமர்வுகள் இம்மாதம் 22ஆம்,- 23ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தமிழ், கணிதம், சங்கீதம், சித்திரம், நடனம் ஆகிய பாட ஆசிரியர்களுக்கு ஜூலை 22ஆம் திகதியும், விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாட ஆசிரியர்களுக்கு ஜூலை 23ஆம் திகதியும் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலைகளில் இப் பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களில் ஒருவரை அல்லது இருவரை இச்செயலமர்வில் பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (117)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1975 ஆம் ஆண்டு, கார்த்திகை 3ஆம் பாதம், லக்கினத்தில் செவ்வாய், கிரகபாவம் 56 உள்ள பிரான்ஸ் நாட்டில் இருக்கும் மணமகனுக்கு வெளிநாடுகளில் உள்ள மணப்பெண்ணைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(52288)(26.17.14) தொடர்பு: 0779994647


✝

விண்ணக வாழ்வின்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

**மேரி திரேசா தவமணி மர்சலீன்**

(தவமணி ரீச்சர்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06.02.1933 | 18.06.2006 |

மம்மி என்றழைக்க இனி
யாருமில்லை எங்களுக்கு!
இவ்வுலகின் அவசரம் கண்டு - நீங்களும்
அவசரமாய் பொன்னுலகம் சென்றீர்களோ!
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்

எங்களை வழி நடத்திய அன்பு மம்மி
எம்மைத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு-
சொல்லாமல் சென்றீர்களோ?
நீங்கள் மறைந்து மாதம் ஒன்றானாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டு
அகலாது

உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

உங்கள் கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

'தவவாசா''
நாக்கியம்புலம்,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம். (52297)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: நல்ல சமாரியன் ஆலயம், கோண்டாவில் கிழக்கு, ஆணி பக்ரறி அருகில். T.P.077 6670175 (52274)

## அறைகள் வாடகைக்கு

மாணவர்களுக்கான (ஆண்கள் மட்டும்) அறைகள் வாடகைக்குண்டு. பிறவுண்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். T.P.077 9578244 (பி.ப. 3-6 மணிவரை) (52296)

## தவறிவிட்டது

17/3, லோட்டஸ் றோட், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை என்ற முகவரியை உடைய சிவஞானம் பிரஜனா, சிவஞானம் துளசிகா என்பவர்களுடைய தேசிய அ.அட்டைகள் (இல.805904658V), (866073740V) சிவன் கோயில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும். (52298)

விக்னேஸ்வரா வீதி, புத்தூர் கிழக்கைச் சேர்ந்த க.அருள்நேசன் என்பவருடைய அ.அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும். (52302)

சண்முகம் இரத்தினலிங்கம் என்பவருடைய தே.அ.அட்டை (இல.652271464V) விசேட அடையாள அட்டை(இல.0906003925) என்பன யாழ்.நகரப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நியூசோதி நகைத் தொழிலகம் சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (சி/50250)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 17.07.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக்கிளைகளிலும், சுட்டி பாம்-வட்டுக்கோட்டை, கரன் -ஆலடி, உடுவில் , ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, நல்லூர் பாம் சென்ரர்- இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-49993)



## COMPUTER PROGRAMMING

| Subjects | Duration | Fees | |
|---|---|---|---|
| | | Group | Personal |
| Java | 30 Hours | 3000.00 | 5000.00 |
| VB.Net | 30 Hours | 3000.00 | 5000.00 |
| C++ | 30 Hours | 3000.00 | 5000.00 |
| C | 30 Hours | 3000.00 | 5000.00 |

- Batch Start on 17-07-2007
- Group Class Only 5 Students
- High Professional Lecturers

**C.B Computer Academy**

T.P No 021-4590291 Station Road, Kondavil


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

### முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்

### மீள் பரீட்சை (பழைய பாடத்திட்டம்)
### முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள்
### கல்வியாண்டு - 2004/2005

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் முதலாம், பகுதி- I, பகுதி -II, பகுதி-III வருட BAd/B.com. மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டு மீள்பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்கள் தமது பட்டப்படிப்பின் அனைத்து பாட அலகுகளிலும் சித்தியடைந்து விண்ணப்பிக்கும் பாடத்தில்/பாடங்களில் சித்தியடைவதன் மூலம் பட்டப்படிப்பை நிறைவுசெய்யக்கூடியவர்களே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவத்தை இன்று (17-07-2006) திங்கட்கிழமை தொடக்கம் பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதில் தோற்றும் மீள் பரீட்சார்த்திகள் மீள்பரீட்சைக்கு ஒரு பாடத்துக்கு (பழைய பாடத்திட்டம்) ரூபா 50/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிடம் செலுத்திய பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பீடாதிபதி அலுவலத்தில் 24-07-2006 திங்கட்கிழமை அன்று அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பரீட்சைகள் ஆகஸ்ட் மாத முற்பகுதியில் நடைபெறும்.

(சி/50246)(26.17.14) -பதிவாளர்


## Earn An Internationally Recognized Diploma in I.T.

After 'A' Level 'O' level → DNT

மாணவர்களே!
சர்வதேச பல்கலைக்கழகங்களில்
பட்டதாரியாகிட விரும்புகிறீர்களா? இன்றே
எம்முடன் இணையுங்கள்

**NIIT Programs lead to an International Degree**

GNIIT → Master's Degree
↑ ↑
Bachelor's Degree
↑ 9 Months
Professional Diploma in IT
↑ 1 Year
Honours Diploma in IT
↑ 6 Months
Certificate in IT
↑ 6 Months
'A' Level / 'O' level

| Diploma Courses | Durations |
|---|---|
| Certificate In Information - Technology | 6 Months |
| Honours Diploma In Information - Technology | 1 Year |
| Professional Diploma In Information - Technology | 2 Years |
| **Advance Technology Courses** | **Durations** |
| VB.Net | 48 Hours |
| ASP.Net | 48 Hours |
| Java Programming | 72 Hours |
| Enterprise Java Programming | 72 Hours |
| XML | 32 Hours |
| Microsoft SQL Sever 2000 | 96 Hours |
| C++$ Linux | 66 Hours |
| **Certificate Courses** | **Durations** |
| Certificate in Microsoft XP | 40 Hours |
| Certificate in Web Designing | 56 Hours |

Admissions are open now

**NIIT Branches**

Union Place 011 4 720790 Gampaha 0334673222
Nugegoda 011 4 408770 Bambalapitiya 011 4 519111
Kurunegala 037 4 691000 Trincomalee 026 2 227767
Kandy 081 4 470 900 Jaffna 021 2 227250

NIIT enabled by cyberskill ASIA'S NO 1

347, 2/1, Kasthuriyar Road, Jaffna. 021 222 7250, 021 4590567.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழீழ தேசிய அடையாள அட்டை வழங்கும் பணி விரைவில் ஆரம்பம்

## தமிழீழ ஆட்பதிவுத் திணைக்களப் பணிப்பாளர் தகவல்

பரந்தன்,ஜூலை17

தமிழீழத் தேசிய அடையாள அட்டைகள் வழங்குவதற்கான பணிகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. அவை விரைவில் வழங்கப்படவுள்ளன என்று தமிழீழ ஆட்பதிவுத் திணைக்களப் பணிப்பாளர் ஆதவன் தெரிவித்தார்.

தமிழீழ ஆட்பதிவுத் திணைக்களம் தாயகம் தழுவிய ரீதியில் மக்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இது தொடர்பாகப் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்:

அடையாள அட்டைகள் தயாரிப்பதற்கான பணிகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. விரைவில் அடையாளஅட்டைகள் உரியவர்களிடம் கையளிக்கப்படும்.

அடையாள அட்டைக்கான பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் விண்ணப்பங்களை தமது பிரதேச போக்குவரத்துக் கண்காணிப்பு பிரிவு செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளலாம்- என்றார்

(352)

## கிளிநொச்சி வலய விஞ்ஞானப் போட்டி

கிளிநொச்சி கல்வி வலயத்தின் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான வலய மட்ட விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகள் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக கல்வி வள நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்ற தரம் 7 தொடக்கம் தரம் 11 வரை கோட்ட மட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களை அனுப்பி வைக்குமாறு சம்மந்தப்பட்ட பாடசாலை அதிபர்களை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கேட்டுள்ளார். (405)

# நீண்ட காலம் திருத்தப்படாத நிலையில் மாங்குளம்- முல்லைத்தீவு பிரதான வீதி

ஒட்டுசுட்டான்,ஜூலை17

மாங்குளம்- முல்லைத்தீவு பிரதான வீதி முழுமையாகப் புனரமைக்கப்படாமையால் பயணிகள் பெரும் சிரமங்களுக்குள்ளாவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

ஒட்டுசுட்டானிலிருந்து- முல்லைத்தீவு வரையான வீதியின் பாலங்கள் மிகவும் சேதமடைந்து அபாய நிலையில் உள்ளன. அத்துடன் வீதியின் இருமருங்கிலும் புதர்கள் மண்டிக் காணப்படுகின்றன. இதனால் போக்குவரத்தில் ஈடுபடுவோர் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை-

ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு மின்சார வசதி போன்ற பல அடிப்படை வசதிகள் இல்லாமையால் அக்கிராம மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

(341)



கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவனம் வருமான அதிகரிப்புத் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் 'போரூட்' நிறுவனத்தின் நிதியுதவியுடனும் பல்வேறு உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றது.

அதன் ஓர் அங்கமாக பயனாளி ஒருவருக்கு பிளாஸ்ரிக் படகு ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம். படத்தில் கரியாலை நாகபடுவான் கிராம சேவகர் சந்திரபாலன், கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சிவசாமி, நிறுவனத் தலைவர் செபமாலை ஆகியோர் காணப்படுகின்றனர். *(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)*

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முதலுதவிப் பயிற்சி

திருவையாறு,ஜூலை17

கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் முதலுதவிப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பயிற்சியின் ஆரம்ப நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெற்றன.முன்பள்ளி நிலையங்களில் ஏற்படும் சிறு விபத்துகளுக்கான முதலுதவிப் பயிற்சியானது முன்பள்ளி ஆசிரியர்களை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 'ஒக்ஸ்பாம்' திட்டக் கிராமங்களில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் இப்பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பயிற்சியின் நிறைவில் முன்பள்ளி நிலையங்களில் பயன்படுத்துவதற்கான முதலுதவிப் பெட்டியும் முதலுதவிப் புத்தகமும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (393)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

# வெட்டுவாகல் பாடசாலைக்கு புதிய கட்டடம் அமைக்க நடுகல்

புதுக்குடியிருப்பு,ஜூலை17

முல்லைத்தீவு வெட்டுவாகல் அ.த.க. பாடசாலைக்குப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல் நடும் விழா கடந்த 10ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு- வெட்டுவாகல் கன்னியர் கோயில் பொங்கல் தினத்தன்று நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் ச.அல்வீனுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கட்டடத்துற்கான அடிக்கல்லை ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மாணவர் ஒருவர் நட்டுவைத்தார்.

இந்நிகழ்வில் நோர்வே அகதிகள் பேரவையினர், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், ஊரக மேம்பாட்டுப் பேரவையினர், இளையோர் மேம்பாட்டு பேரவையினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், வெட்டுவாகல் கன்னியர் கோயில் நிர்வாகத்தினர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(353)

# பகிடிவதை என்ற அநாகரிகச் செயலைக் கைவிட்டு புதிய மாணவர்களை இன்முகத்துடன் வரவேற்குக

## சிரேஷ்ட மாணவர்களுக்கு பதில் துணைவேந்தர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூலை17

பகிடிவதை என்ற அநாகரிகச் செயலைக் கைவிட்டு புகுமுக மாணவர்களை இன் முகத்துடன் வரவேற்று முன்மாதிரியாக சிரேஷ்ட மாணவர்கள் நடப்பார்கள் என நம்புகிறேன்.

-இப்படிக் கூறியுள்ளார் யாழ். பல்கலைக் கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேலு.

யாழ். பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் இன்று ஆரம்பமாகின்றன. இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை இன்று திங்கட்கிழமை அநேகமான பீடங்களில் ஆரம்பிக்கவுள்ளனர். இப் புதிய மாணவர்களை எனது சார்பிலும் பல்கலைக்கழக சமூகம் சார்பிலும் வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

புதிய மாணவர்களுக்கு பல்கலைக்கழக வாழ்வு பரிச்சயமாக சிலகாலம் செல்லும். ஆகவே, அவர்களது உடனடியான முக்கிய தேவைகளைக் கருத்திற்கொண்டு பல்கலைக் கழகத்தில் அவர்களது செயற்பாட்டிற்கு அத்தியாவசியமான சில விடயங்களில் வழிகாட்டும் நோக்குடன் சகல பீடங்களும் வழிகாட்டல் நிகழ்வுகளை முதல் வாரத்தில் நடத்த ஒழுங்கு செய்துள்ளன.

புதிய மாணவர்கள் இச் சமயத்தில் இருப்பிட வசதி, உணவு, போக்குவரத்து, பாதுகாப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியிருப்பதை நான் நன்கறிவேன்.இவ்வாறான பிரச்சினைகளில் யானும் எனது சக ஆசிரியர்களும் மாணவ ஆலோசகர்களும் புதிய மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் இயன்ற உதவிகளையும் வழங்க ஆயத்தமாகவுள்ளோம்.

மாணவர்களின் பல்கலைக்கழக வாழ்வு பயனுள்ளதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் அமைய வேண்டுமென்பதே பல்கலைக் கழக சமூகத்தினதும் எனதும் விருப்பாகும்.

புதிய மாணவர்களை சிரேஷ்ட மாணவர்கள் பகிடிவதைக்குட்படுத்தும் நிகழ்வுகள் பற்றி முன்னைய ஆண்டுகளில் செய்திகள் வந்துள்ளன. பகிடிவதை என்பது இன்று மேலை நாடுகளில் அநாகரிகமானதாகக் கருதப்பட்டு முற்றாகக் கைவிடப்பட்டதொன்றாகும். இலங்கைப் பல்கலைக் கழகங்கள் பலவற்றிலும் பல பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் இவ்வாறான அநாகரிகச் செயல்களைக் கைவிட்டார்கள் என நம்புகிறேன்.யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஏனையோருக்கு முன்னுதாரணமாகச் செயற்படுவார்கள் என நம்புகிறேன். சிறப்பாக துன்பங்கள் நிறைந்த இன்றைய காலகட்டத்தில் அநாகரிகச் செயற்பாடுகளில் இன்பம் காண விளையாது சமூகப் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்வது அவசியம். சிரேஷ்ட மாணவர்கள் பொறுப்புடன் நடந்து புதிய மாணவர்களை இன்முகத்துடன் வரவேற்று முன்மாதிரியாக நடப்பார்கள் என நம்புகிறேன். பல்கலைக்கழகத்தில் கல்விச் சூழலை பேண மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகத்தினர் அனைவரும் ஒருசேரப் பங்களிக்க வேண்டியது அவசியம். இவ்விடயத்தில் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியமும் மாணவர் சங்கங்களும் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டு எம்முடன் ஒத்துழைக்க முன்வந்திருப்பதை மனமாரப் பாராட்டுகிறேன். இவ்வாறான சூழ்நிலையில் எந்தவொரு சிறு குழுவினராவது பல்கலைக்கழகத்தின் அமைதியான கல்விச் சூழலைக் குழப்ப விளையின் அதுபற்றி பல்கலைக்கழகச் சட்ட விதிமுறைகளுக்கு அமையக் கடுமையான நடவடிக்கைகள் எடு... வாகக் கூறிக்கொ...

பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளேயாயினும் சரி வெளியேயாயினும் சரி புதிய மாணவர்களைப் பகிடிவதை மூலம் உளரீதியாகவோ, உடல்ரீதியாகவோ தொந்தரவு செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

### தகவல்களின் இரகசியம் பேணப்படும்

புதிய மாணவர்களைத் துன்புறுத்துபவர்கள், துன்புறுத்துவதற்குத் துணை போகிறவர்கள், துன்புறுத்தலுக்கு உள்ளானதைப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தாது மறைக்கின்ற புதிய மாணவர்கள் உட்பட அனைவர் மீதும் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். புதிய மாணவர்களை தமது வதிவிடங்களுக்கோ அல்லது வேறு எவரினதும் வதிவிடங்களுக்கோ கல்வியாண்டின் முதல் இரண்டு மாதங்களுக்கு உட்பட்ட காலத்தில் சிரேஷ்ட மாணவர்கள் அழைத்துச் செல்வது தண்டனைக்குரிய குற்றமாகும். அவ்வாறு செல்ல நிர்ப்பந்திக்கப்படும் புதிய மாணவர்கள் அதனைப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்தாது இருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். இவ்வாறு தெரிவிக்கப்படும் தகவல்கள் இரகசியமாக வைத்திருக்கப்படும்.

### பணம் சேகரிக்கத் தடை

புதிய மாணவர்களிடமிருந்து பணம் சேர்ப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது. துணைவேந்தரின் முன் அனுமதியின்றி அங்கீகரிக்கப்பட்ட மாணவர் சங்கங்கள் உட்பட எவரும் கல்வியாண்டின் முதல் இரண்டு மாதங்களுக்கு பணம் சேர்க்கமுடியாது. இவை தண்டனைக்குரிய குற்றங்கள் மேற்கூறப்பட்ட குற்றங்களுக்கு விதிக்கப்படக்கூடிய அதி குறைந்த தண்டனை சம்பந்தப்பட்ட மாணவரைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு வருடத்திற்கு இடைநிறுத்தி வைத்தலாகும்.

பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள், சிரேஷ்ட மாணவ ஆலோசகர், மாணவ ஆலோசகர்கள், பிரதிப் பிரதம மாணவ ... அதிகாரி ஆகியோர் ஒழுங்கீனம், குற்றச்செயல்களில் ஈடுபடுதல் என்பவற்றைத் தடுத்து நிறுத்தும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார்கள். அத்துடன், அத்தகு நிகழ்வுகளை எனது கவனத்திற்கு கொண்டு வந்து ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பும் பொறுப்பும் உடையவர்கள். பன்னிரண்டு மாணவ ஆலோசகர்கள், சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் ஒருவரின் கீழ் நியமிக்கப்பட்டு அவர்களது பொறுப்புகள் அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவர்களுக்கு ஏனைய ஆசிரியர்களது ஒத்துழைப்பு மிக இன்றியமையாததாகும்.

விரிவுரையாளர் அல்லது பல்கலைக்கழக அதிகாரி ஒருவர் மாணவர்களிடம் அவர்களது அறிமுக அட்டையைச் சமர்ப்பிக்குமாறு கேட்கும் இடத்து அவர்கள் அதனை ஒப்படைக்கத் தயாராயிருத்தல் வேண்டும். அவ்வாறு ஒப்படைக்கத் தவறும் மாணவர்களுக்கு எதிராகத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

### தண்டனைகள்

புதிய மாணவர்களைத் துன்புறுத்தல், பகிடிவதை செய்தல் ஆகியவற்றில் ஈடுபடுபவர்களுக்கும் அதற்கு அனுசரணையாக விருப்போருக்கும் கீழ்க்கண்ட தண்டனைகள் விதிக்கப்படலாம் என்பதனை மாணவர்கள் அறிந்திருப்பதற்காக கீழே அறியத்தருகிறேன்.

✱ குற்றவாளியாகக் காணப்படுவோரின் மாணவர் நிலையை உடனடியாகத் தற்காலிக இடைநிறுத்தம் செய்தல். இதற்குப் பல்கலைக்கழகத்தின் எந்தவொரு ஆசிரியரினதோ, அதிகாரியினதோ முறைப்பாடு போதுமானதாகும்.

✱ விசாரணையின்போது குற்றவாளியாகக் காணப்படும் ஒருவரின் மாணவர் நிலை குறைந்தது ஒரு வருடத்திலாவது இடைநிறுத்தம் செய்யப்படும். பாரதூரமான குற்றமாயிருப்பின் அம்மாணவனின் பதிவு ரத்துச் செய்யப்பட்டு அம்மாணவன் பல்கலைக்...

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பகிடிவதை என்ற.....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழகத்திலிருந்து வெளியேற்றப்படுவார்.

✱ விடுதியில் வசிக்கும் மணாவரொருவர் பகிடிவதைலீடுபட்டதாக தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரிடமிருந்து முறைப்பாடு கிடைப்பின் அம்மாணவரது விடுதி வசதி இடைநிறுத்தம் செய்யப்படும். அவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து பின்னெப்போதும் விடுதி வசதி பெறுவதற்குத் தகைமை அற்றவராகக் கணிக்கப்படுவர்.

✱ மகாபொல புலமைப்பரிசில் மற்றும் கொடுப்பனவுகள் இடைநிறுத்தம் செய்யப்படலாம்.

✱ பகிடிவதையில் ஈடுபட்டதாகக் காணப்பட்டவர்கள் அதன் விளைவாக மாணவர் நிலையை இழந்தவர்கள் அல்லது தண்டனை பெற்றவர்கள் சம்பந்தமாக அவர்களின் பெற்றோர்களுக்கு / பாதுகாவலர்களுக்கு அறிவிக்கப்படும்.

மேற்கூறப்பட்ட விடயங்களை கவனத்திற்கொண்டு புதிய மாணவர்களைத் துன்புறுத்தல் அல்லது அதற்கு உடந்தையாக இருத்தல் என்பனவற்றைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் ஏனைய மாணவர்களினது கல்வி நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காத முறையில் நடந்துகொள்ளுமாறும் மாணவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

### பெற்றோருக்கும் பொறுப்பு

இவ்விடயத்தில் பெற்றோர்களும் சமூகத்திற்கும் ஊடகத்துறைக்கும் பாரிய பொறுப்புள்ளதாகக் கருதுகிறேன். இன்று மாணவர்களை எதிர்நோக்கும் பெரும் பிரச்சினை கற்பதற்கேற்ற சூழ்நிலையுள்ள வதிவிடமொன்றைத் தேடிக்கொள்ளலாகும்.

பல்லைக்கழகத்திற்கு அண்மித்த இடங்களிலுள்ள வீட்டுச் சொந்தக்காரர்கள் முன்னைய காலங்களில் எமது மாணவர்களுக்கு உதவியது போல் இம்முறையும் வதிவிட வசதி செய்துகொடுக்குமாறு வினயமாகக் வேண்டுகின்றேன். அதவேளை நீங்கள் அவர்களுக்குச் செய்த உதவியை அவர்கள் துஷ்பிரயோகம் செய்யாது பார்த்துக்கொள்ள வேண்டியதும் அவசியமானதும் விரும்பத்தக்கதுமாகும். உங்கள் வீடுகளில் பகிடிவதைகள் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்துகொள்வதும் உங்கள் வேண்டுதலை உதாசீனம் செய்தால் அவர்களின் செயற்பாடுகளைப் பல்கலைக்கழக நிர்வாகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதும் உங்கள் கடமையாகும். அவ்வாறு நீங்கள் செய்வதன் மூலம் ஆரோக்கியமானதொரு சமூகம் உருவாக உதவியவர்களாவீர்கள். உங்களது வீட்டில் வசிக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் பற்றிய விவரங்களை நீங்கள் எமக்கு அறியத்தரின் அது உங்களுக்கும் பல்கலைக் கழகத்திற்கும் உதவியாகவிருக்கும். மாணவர் வதியும் தனியார் வீட்டுச் சொந்தக்காரரினதும் பொதுமக்களினதும் ஒத்துழைப்புடனேயே பல்கலைக்கழகத்திற்கு வெளியே பகிடிவதைகள் இடம்பெறாமல் தவிர்க்கலாம்.

### ஊடகத்துறையின் பங்களிப்பு

பல்கலைக்கழகத்திற்கு வெளியே இடம்பெற்ற ஒரு சில பகிடிவதைகளை பல்கலைக் கழக நிர்வாகம் அறிய வருவதற்கு ஊடகத் துறையினர் கடந்த காலங்களில் பங்களித்துள்ளனர். இது வரவேற்கத்தக்கது. கடந்த மாதம் 26ஆம் திகதி பல்கலைக்கழக வளாகத்திற்கு வெளியே தனியார் வீடுகளில் பகிடிவதை இடம்பெறுவதாகப் பல பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியைத் தொடர்ந்து இப்பத்திரிகைச் செய்திகளில் காணப்பட்ட தகவல்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க பல்கலைக்கழகம் மூன்று பேராசிரியர்கள் அடங்கிய உயர்மட்ட விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அக்குழுவின் இடைக்கால அறிக்கை என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கை சில உண்மைகளை வெளிக் கொணர்ந்துள்ளது. இச்சம்பவங்கள் தொடர்பாக மேலும் சில உண்மைகளைக் கண்டறிய விசாரணை தொடர்ந்து நடைபெறவுள்ளது. விசாரணைக் குழுவின் இறுதிப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும். பல்கலைக் கழகத்திற்கு வெளியே இடம்பெற்ற இச்சம்பவங்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்திய பத்திரிகைகள் பாராட்டுதற்குரியன.

தமிழ்ச் சமூகத்தின் உயிர்நாடியான யாழ். பல்கலைக்கழகம் அதன் கடமைகளை நிறைவேற்றி பண்புமிக்க வருங்காலத் தலைவர்களை உருவாக்குவதற்கு மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக சமூகத்தின் இதர பங்காளிகள் பெற்றோர்கள், பொதுமக்கள், ஊடகத்துறையினர் அனைவரது ஒத்துழைப்பும் இன்றியமையாதது. அது வேண்டப்படுகிறது. - என்றுள்ளது. (1)

## பரிசளிப்பு விழா ஒத்திவைப்பு

நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த வட இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என்று கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (173)

## உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

வல்வெட்டித்துறை நகர சபையின் 'உள்ளூராட்சி வாரம்' சிறப்பாக அனுஷ்டிக்கப்படு கின்றது.

இதன் முதற்கட்டமாக கடந்த புதன்கிழமை வல்வெட்டித்துறை நகர சபைச் செயலாளர் மற்றும் ஊழியர்களும் இணைந்து நெற்கொழு வயிரவர் கோயில் சுற்றாடலில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கான கல்விசார் போட்டிகளும் விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் கிரிக்கெட் சுற்றுப்போட்டியும் நடத்தப்படுமென தெரிவிக்கப்பட்டது.(1-70)


### தவறிவிட்டது

திலகசாந்தன் பிரியாந்தன் என்பவருடைய தே.அ.அட்டை [812171429], விசேடஅ.அட்டை வாகன அனுமதிப்பத்திரம், JOB IC. என்பன பொற்பதி வீதிக்கும் திருநெல்வேலிச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைக்கவும்.

DIA VIDEO- ELECTRONIC CENTER, (52317) (11-24)
THIRUNELVELI JUNCTION,
THIRUNELVELI. T.P:.077 6536626

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம்,தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபல்யமானவர்.

**சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.**

வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 2459
(51988) (24-11-)


### துயர் பகிர்கிறோம்

எமது பாடசாலை ஆசிரியை **திருமதி வளர்மதி தேவகுமார்** அவர்களின் சகோதரர் **கனகசபை பகிரதன்** *(மீசாலை கிழக்கு)* அவர்கள் லண்டனில் அகலா மரணமெய்தியதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பாடசாலைச் சமூகம், கிளி/பரந்தன் இந்து மகாவித்தியாலயம்.**

(சி/50247) (26-11-24)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி யஜ்நதேவி கந்தவநாதன்

யா/நெல்லியடி மத்தியமகா வித்தியாலய சங்கீத ஆசிரியை திருமதி யஜ்நதேவி கந்தவநாதன் (சங்கீதபூஷணம்) 15.07.2006 லண்டனில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நெல்லியடி. ஆசிரியர்கள், மாணவர்கள்.

(சி/50251) (24-11)

### செல்லத்துரை சிவபாதம்



யாழ். அராலி வடக்கு, செட்டியார்மடத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்த்துரை சிவபாதம் அவர்கள் 15-07-2006சனிக்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - பாக்கியம் தம்பதியரின் ஏகபுத்திரனும் பராசக்தி (சுவிஸ்)யின் அன்புக் கணவரும் தனலட்சுமி, இராஜேஸ்வரி (பிரான்ஸ்), வசுந்தரா (ஆசிரியர் - கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் குகேந்திரன் (பிரான்ஸ்), குகதாசன் (குகன் புகைப்படக் கலையகம், கிளிநொச்சி), தவராசா, யோகராசா (கனடா), சத்தியமதி (கனடா), சாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கஸ்தூரி, மாதங்கி, மதுராங்கி, சாருஷன், துஷாந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனும் சுவிஷினியின் அன்புப் பெரியப்பாவும் காலஞ்சென்ற தர்மலிங்கம் பூரணத்தின் பாசமிகு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20-07-2006 வியாழக் கிழமை சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அன்னை நிழல்"
செட்டியார்மடம்,
வட்டுக்கோட்டை,
தொ.பே. இல.: 0776218389

தகவல்:
செல்வி செ.தனலட்சுமி
(அக்கா).
(52319) (24-11)


நீங்களும் ஒரு வெற்றியாளரா என்பதை பாருங்கள் !

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு இல. | 796 |
| திகதி | 14.07.2006 |
| டிக்கட்டின் வர்ணம் | சிவப்பு |

செல்லுபடியாகும் தொடர் இல.
5275717-5290434

உத்தியோகபூர்வ முடிவுகள் வெற்றி இலக்கங்கள்

**01 27 28 35**

லக்னம் இடபம்

ஜக்பொட் பரிசு
**Rs.1,000,000/-**
வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 326898 | ரு. 10/- | ரு. 3,268,980/- |
| 2 இலக்கங்கள் | 30032 | ரு. 20/- | ரு. 600,640/- |
| 1 இல.+லக்னம் | 29792 | ரு. 30/- | ரு. 893,760/- |
| 2 இல.+லக்னம் | 2708 | ரு. 100/- | ரு. 270,800/- |
| 3 இலக்கங்கள் | 805 | ரு. 500/- | ரு. 402,500/- |
| 3 இல.+லக்னம் | 76 | ரு. 5,000/- | ரு. 380,000/- |
| 4 இலக்கங்கள் | 04 | ரு. 100,000/- | ரு. 400,000/- |
| 4 இல.+லக்னம் | 0 | ரு. 1,000,000/- | ரு. - |
| மொத்தம் | | | ரு. 6,216,680/- |
| முச்சக்கர வண்டியின் பெறுமதி | 5 | ரு. 204,700/- | ரு. 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 390320 | | ரு. 7,240,180/- |

இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசு
**ரு. 1,730,100/-**

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றிபெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 5276073-9-95 |
| மாத்தளை | 5283254-9-34 |
| கொழும்பு | 5279751-6-62 |
| காலி | 5281892-8-01 |
| கண்டி | 5276487-3-43 |

தொடர் இல. 4394335 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2006 ஜுலை 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை


வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவன இளைஞர்சபை நடாத்தும்

## சதுரங்கப் போட்டி - 2006

வயது 5 – 35 வரை

ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம். போட்டிகள் அனைத்தும் இலவசமாக நடாத்தப்படும்

அருகே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தை A4 தாளில் பூர்த்தி செய்து தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சதுரங்கப் போட்டி – 2006" எனக்குறிப்பிட்டு,20.7.2006 திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு தபாலில் அனுப்பி வைக்கவும்.

↘ போட்டியில் பங்கு பற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

போட்டிநடைபெறும்திகதி 22.07.06

மாதிரி விண்ணப்பப் படிவம்:

யாழ் மாவட்ட மட்டத்திலான
சதுரங்கப் போட்டி - 2006

முழுப் பெயர்: ..............................
விலாசம்: ..............................
வயது: ......... பிறந்த திகதி:.............
தேசிய அடையாள அட்டை இல: ............
மாணவராயின் பல்கலைக்கழக / பாடசாலையின் பெயர்:-..............................

..........
கையொப்பம்

**போட்டிநடைபெறும் இடம் மற்றும் அனுப்பவேண்டிய முகவரி:**

வட பிராந்திய இளைஞர் சபை
பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்,
# 166/5, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் **26 30 41 66** சுப்பர் இல. **04**

ஜக்பொட் பரிசு ரு. **2,774,550/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இல. + சுப்பர் இல. | 0 | 2,774,550/- | |
| 4 இல. | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 3 இல. + சுப்பர் இல. | 25 | 5,000/- | 125,000/- |
| 3 இல. | 413 | 1,000/- | 413,000/- |
| 2 இல. + சுப்பர் இல. | 1350 | 500/- | 675,000/- |
| 2 இல. | 20199 | 40/- | 807,960/- |
| 1 இல. + சுப்பர் இல. | 19101 | 20/- | 382,020/- |
| 1 இல. | 287414 | 10/- | 2,874,140/- |
| மொத்தம் | | | 7,277,120/- |
| [illegible] | 5 | 120,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 328,509 | | 7,877,120/- |

| | |
|---|---|
| நுவரேலியா | 301203144-6-90 |
| இரத்தினபுரி | 301204509-2-23 |
| மாத்தறை | 301204274-7-63 |
| மொணராகலை | 301206917-9-98 |
| கேகாலை | 301204895-9-37 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
**ரு. 3,542,200/-**

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை




யாழ். நாயன்மார்கட்டு

**அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய**

## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2006

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் விய வருடம் ஆடித் திங்கள் 2ஆம் நாள் (18.07.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று 10ஆம் நாள் தேர் உற்சவம் 11ஆம் நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. தினந்தோறும் அடியார்கள் விரதம் அனுட்டித்து வருகை தந்து அன்னையை வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**மஹோற்சவ காலக் கிரியா விவரம்**

| | |
|---|---|
| கொடியேற்றம் | 18.07.2006 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி |
| | காலை 7 மணிக்கு அபிஷேகம் |
| | காலை 8 மணிக்கு வசந்தமண்டபப் பூசை |
| | முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றம் |
| தேர்த்திருவிழா | 27.07.2006 வியாழக்கிழமை |
| | முற்பகல் 9 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணித்தல் |
| தீர்த்தத்திருவிழா | 28.07.2006 வெள்ளிக்கிழமை |
| | முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தம் எடுத்தல் |
| கொடியிறக்கம் | இரவு 7 மணிக்கு |

அன்னாபிஷேகமும் அன்னதானமும் 29.07.2006 சனிக்கிழமை
வைரவர் சாந்தி 30.07.2006 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு

மஹோற்சவ பிரதம குரு:
**சிவஸ்ரீ சதா.மஹாலிங்கசிவக்குருக்கள் J.P.**
(பிரதம குரு,
யா/நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் ஆலயம்)

நாயன்மார்கட்டு. - ஆலய பரிபாலன சபையினர்.

(52314) (24-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தீவுப் பகுதி இந்து அறநெறிப்பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களுக்கான வருடாந்த வதிவிடச் செயலமர்வு நேற்றைய தினம் தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. தீவுப் பகுதி அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 60 ஆசிரியர்கள் இந்த செயலமர்வில் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. செயலமர்வில் கருத்துரை வழங்கிய முன்னாள் கல்விப் பணிப்பாளர் கோ.சி. வேலாயுதம் பிரதேச கலாசார அபி விருத்தி உதவியாளர் வி. விஜயரட்சகனால் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் தீவுப்பகுதி அபிவிருத்தி உதவியாளர் (இந்து கலாசாரம்) எஸ். உதயபாலன் தலைமை உரை நிகழ்த்துவதையும் முதல் இரு படங்களில் காணலாம். அறநெறிப் பாடசாலைகளுக்கான சீருடைகளை உதவி அரசாங்க அதிபர் க. ஸ்ரீ மோகனன், கணக்காளர் எஸ். கிருபாகரன் ஆகியோர் வழங்குவதை அடுத்துள்ள படங்களிலும் செயலமர் வில் கலந்துகொண்ட ஆசிரியர்களில் ஒரு பகுதியினரை இறுதியாகவுள்ள படத்திலும் காண லாம்.


## பதவி வெற்றிடம்

**ADMINISRATIVE OFFICER**

**நிர்வாக உத்தியோகத்தர்**

கொழும்பில் இயங்கும் சுடர் ஒளி பத்திரிகை நிறுவனத்திற்கு மேற்படி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

தகைமைகள்:

1. சரளமாக மூன்று மொழிகளும் உரையாட தெரிந்திருத்தல்.
2. 30 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல்.
3. நிர்வாகம் தொடர்பாக முன் அனுபவம்.
4. கணனி பற்றிய அறிவு (ஓரளவு)
5. ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

* தேவை ஏற்படின் தங்குமிட வசதி வழங்கப்படும்

தகமையுடையோர் எதிர்வரும் 19.07.2006 புதன்கிழமை காலை 10 மணிக்கு கீழ்வரும் முகவரிக்கு நேரில் வரவும்.

**உதயன் பணிமனை**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-50256)



**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

வடிவேல், மனோரமா நடித்த

இம்சை அரசன் 23ஆம் புலிகேசி

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம். (சி-47139)



**நாதன்ஸ்** சினிமா யாழ்ப்பாணம்

ரிச்சட், மதுமிதா, நாசர் நடித்த

**நாளை**

சண்டைகள் நிறைந்த சித்திரம்

காட்சி நேரம் : 10.30, 2.30 (சி-49188)



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

1 17 07 2006

லண்டனைச் சேர்ந்த சிவகரன் - பத்மபிரியா தம்பதியரின்



## செல்வப் புதல்வன் விதுசன்



தனது முதலாவது பிறந்த நாளை இல. 101 கட்சன் வீதியில் வசிக்கும் அம்மப்பாவின் இல்லத்தில் இன்று 17.07.2006 திங்கட்கிழமை வெகு சிறப்பாக கொண்டாடுகிறார்.

செல்வனை சிறப்புடனும், தெய்வ அருளோடும் பார் போற்ற நீடூழி வாழவேண்டும் என வாழ்த்தி நிற்கின்றனர்.

வட்டக்கச்சியில் உள்ள மாமன்மார், அம்மப்பா, சித்தி.

(சி-50255)


## மாடு திருட்டு அதிகரிப்பு

தென்மராட்சி, ஜூலை17

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்திலிருந்து மேய்ச்சலுக்காக நுணாவில் பகுதிக்கு வரும் மாடுகள் அங்குள்ளவர்களால் பிடித்து விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சி தெற்கு தனங்கிளப்பு, மறவன்புலோ ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து இதுவரை தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமராத 600 குடும்பங்களுக்குச் சொந்தமான மாடுகள் தேடுவாரற்று அலைகின்றன.

இந்த மாடுகள் மேய்ச்சலுக்காக வரும் வேளையில் பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் அப்பகுதி விவசாய சம்மேளனங்களுக்கு முறையிட்டுள்ளனர்.

நுணாவில், கைதடி நுணாவில் ஆகிய பகுதிகளில் மாடுகள் பிடிக்கப்படுவதைத் தடை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு மறவன்புலோ விவசாய சம்மேளனத்தினர் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(117)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை பிரவணசொருபன் (தவம்)



வேலணை மேற்கு, சிற்பனையை வசிப்பிடமாகக்கொண்ட தவம் என அழைக்கப்படும் பொன்னுத்துரை பிரணவசொருபன் நேற்று (16.07.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் பத்மாதேவியின் அன்புக் கணவரும் சுகிதா, சுதர்சன், சுதர்சா, மதுர்சன், சுலக்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்னலட்சுமியின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2006) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் அம்பலவி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிற்பனை முருகன் கோயிலடி,
ஏழாம் வட்டாரம்,
வேலணை மேற்கு. (52323)

தகவல்:
குடும்பத்தினர், மனைவி.

### ஆறுமுகம் கனகசபாபதி



யாழ்ப்பாணம், தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் கொழும்பு அழுத்மாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகசபாபதி 13.07.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், மோகனராஜன் (பிரான்ஸ்), சியாமளா, மஞ்சுளா (ஜேர்மனி), வத்சலா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயகுமார் (பாரின்), சந்திரகுமார் (ஜேர்மனி), மணிவண்ணன் (சுவிஸ்), முகுந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் நிரோஷன், ஹரி, கயல், விதுர்ஷன், வினுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜயரட்ண மலர்ச்சாலையில் இன்று திங்கள் (17.07.2006) முதல் வியாழன் (20.07.2006) முற்பகல் 10 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக வியாழக்கிழமை (20.07.2006) கனத்தை இந்து மயானத்திற்கு முற்பகல் 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

250, 2/3, அழுத்மாவத்தை வீதி,
கொழும்பு - 15.
தொ.பே. 0112 529062. (52324)

தகவல்:
குடும்பத்தினர்.

### சதாசிவம் இராமநாதன்

(பிரபல சட்டத்தரணி J.P.U.M.)

புலோலி கிழக்கு, பருத்தித்துறையைச் சேர்ந்தவரும் முல்லைத்தீவு, வவுனியா, பருத்தித்துறை நீதிமன்றங்களில் சட்டத்தரணியாக பணிபுரிந்த சதாசிவம் இராமநாதன் நேற்று (16.07.2006) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - பாக்கியம் தம்பதியரின் அன்புக் கணவரும், சரஸ்வதி (லண்டன்), கமலாதேவி, ஈஸ்வரி, காலஞ்சென்ற முத்துக்குமாரு ஆகியோரின் அன்புச் சகோதரரும், விஜேந்திரா (சட்டத்தரணி - பருத்தித்துறை), இராஜகுலேந்திரா (சட்டத்தரணி-நுவரெலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிலானி (லண்டன்), பூம்பாவை(லண்டன்), அச்சுதராம் (லண்டன்), அருள்மொழி ராமன் (லண்டன்), ஸ்ரீராஜராமன் ( லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வாசுதேவன் (லண்டன்), செந்தில்நாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் வருணன் (லண்டன்), லாவண்யா (லண்டன்), ஆரண்யா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'திகிரி',
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
தொ.பே. 021 226 3679. (சி-50257)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு வாகனேரியில் கடந்த வெள்ளியன்று வீரச்சாவடைந்த 4 போராளிகளின் வித்துடல்கள் புனித விதைகுழியில் விதைப்பதற்கு முன்பதாக கரடியனாறு மகா வித்தியாலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. மாவீரர்களின் வித்துடல்களை முதலாவது படத்திலும், வித்துடல்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்துவதை இரண்டாவது படத்திலும், மாவீரரின் தாயாரொருவர் மலர்தூவி அஞ்சலி செலுத்துவதை இறுதியாக உள்ள படத்திலும் காணலாம்.

# துணை ஆயுதக் குழுவினரால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை

## வாழைச்சேனையில் சம்பவம்

மட்டக்களப்பு வாழைச்சேனய்யில் சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை பட்டியடிச்சேனை பகுதி கல்குடாவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கான குடியிருப்பில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு துணை இராணுவக் குழுவினர் நுழைந்து இத்துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

துணை இராணுவக் குழுவினரால் கொல்லப்பட்டவர் ஆறுமுகம் கலாகரன் (வயது 23) என அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆறுமுகத்தின் உடலை நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மனிக்கு சிறிலங்கா காவல்துறையினர் மீட்டனர். அவரது உடலில் 11 ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் துளைத்திருந்தன்.

வாழைச்சேனை மருத்துவமனையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் கலாகரனின் உடல் அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

பட்டியடிச்சேனையில் உள்ள ஜி.ரி.இசட். அலுவலகத்திலிருந்து 200 மீற்றர் தொலைவில் கலாகரனின் வீடு அமைந்துள்ளது.

மட்டக்களப்பு நகரிலிருந்து வடபகுதியில் 29 கிலோ மீற்றர் தொலைவில் இச்சம்பவம் நடந்தது.

## வடக்கில் இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னார். பின்னர் அங்கிருந்து குடாநாட்டில் உள்ள முன்னரங்க பாதுகாப்பு நிலைகளுக்கு நேரில் விஜயம் செய்தார். அவருடன் முப்படைகளின் உயர்மட்ட அதிகாரிகளும் உடன் சென்றனர்.

நாகர்கோவில், முகமாலை ஆகிய - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை அண்டிய - முன்னணிப் பாதுகாப்பு நிலைகளைப் பார்வையிட்ட கோட்டாபய அவற்றின் வலுநிலை குறித்து அங்கு களத்தில் செயற்படும் படை அதிகாரிகளோடு மதிப்பீடு செய்தார். இராணுவ நடவடிக்கைகள், திடீர்த் தாக்குதல்களை எதிர்கொள்வதற்கான படையினரின் தயார் நிலை பற்றி விசேடமாக மதிப்பீடு செய்யப்பட்டது என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கடற்படைத் தளம் அமைந்துள்ள கிளாலி பிரதேசத்துக்கும் ராஜபக்ஷ குழுவினர் விஜயம் செய்தனர். அங்கிருந்து காங்கேசன்துறை துறைமுகப் பகுதிக்கும் பின்னர் காரைநகர் கடற்படைத் தளத்திற்கும் சென்றனர்.

அதன்பின்னர் வடக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் எதிர்கால இராணுவச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான விசேட மாநாடு ஒன்றையும் கோட்டாபய ராஜபக்ஷ கூட்டினார்.

இந்த மாநாடு யாழ். நகரில் நிலை கொண்டுள்ள 512 ஆவது படைப்பிரிவின் தலைமையகமான ஞானம்ஸ் ஹோட்டேலில் நேற்று முற்பகல் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கோட்டாபய ராஜபக்ஷவும் படை உயர் அதிகாரிகளும் பலாலியில் இருந்து விசேட ஹெலிக் கொப்டரில் யாழ். நகர் வந்து சேர்ந்தனர்.

யாழ்.கோட்டைப் பகுதிவரை ஹெலிக் கொப்டரில் சென்ற குழவினர் பின்னர் அங்கிருந்து பலத்த பாதுகாப்புடன் 512 ஆவது படைப்பிரிவுத் தலைமையகத்துக்கு இராணுவக் கவச வாகனங்களில் சென்றனர்.

512 ஆவது படையணித் தலைமையகத்தில் இடம்பெற்ற மாநாட்டில் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படைப்பிரிவுக்குப் பொறுப்பான பிரிகேடியர் நிலை அதிகாரிகளும் ஏனைய அதிகாரிகளும் பங்கு பற்றினர்.

யாழ். குடாநாட்டில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய இராணுவச் செயற்பாடுகள், அதற்கான வள வசதிகள் மற்றும் பாதுகாப்பைப் பலப்படுத்தத் தேவையான ஏற்பாடுகள் போன்ற விடயங்கள் குறித்து இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

## அண்ணனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டவர்கள் இருவரும் நவரட்ணம் வசீதரன் (வயது24), நவரட்ணம் பகீரதன் (வயது 23) என அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

இருவரது சடலங்களையும் [illegible]த்தித்துறை நீதிவான் சென்று பார்வையிட்டார். அவற்றை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனைக்குட்படுத்துமாறு பொலிஸாரைப் பணித்தார்.

இந்த இரட்டைப் படுகொலைச் சம்பவம் பருத்தித்துறை நகரில் பெரும் பதற்றத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் ஓட்டோ சாரதிகளையும் உரிமையாளர்களையும் இலக்கு வைத்து நடத்தப்பட்டு வரும் படுகொலைகளின் தொடர்ச்சியான சம்பவமே இந்தத் தாக்குதல் என்று சந்தேகிக்கப்படுகிறது. (ஐ-173-70-86-15)

## கெருடாவிலில் சிப்பாய் பலி!

வடமராட்சி கெருடாவில் பகுதியில் நேற் றுக்காலை ரோந்து சென்ற படையினர் மீது கி[illegible]னேட் வீச்சு நடத்தப்பட்டது என்றும் இதில் சிக்கி சிப்பாய் ஒருவர் பலியானார் என்றும் செய்திகள் தெரிவித்தன.

எனினும் இதனை ஊர்ஜிதப்படுத்த முடிய வில்லை. இணையத் தளங்கள் பலவற்றிலும் இது தொடர்பான செய்திகள் நேற்றிரவு வெளியாகியிருந்தன.

## கட்டார் விமானத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் எச்சரிக்கப்பட்டது.

இதனையடுத்து விமான நிலையப் பாதுகாப்புப் பிரிவினர் உஷார்படுத்தப்பட்டனர். விமானத்தின் பயணம் நிறுத்தப்பட்டது. அதில் இருந்த பயணிகள் அனைவரும் அவசர அவசரமாக இறக்கப்பட்டு பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். விமானத்தில் இருந்த பொதிகளும் இறக்கப்பட்டு விமானம் தனிமையான பகுதிக்கு நகர்த்தப்பட்டு சல்லடைபோட்டு சோதனையிடப்பட்டது.

தீயணைப்பு மற்றும் அவசர சேவைப் பிரிவுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

சுமார் இரண்டு மணிநேரத்துக்கும் அதிகமாகசோதனையிடப்பட்டபோதும் விமானத்தில் வெடிகுண்டோ அல்லது ஆபத்தான வேறு எந்தப் பொருளுமோ கண்டுபிடிக்கப்படவில்லை.

பல மணிநேரம் பயணம் தடைப்பட்டதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகினர். (ஐ-5)

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்துஜீவ வோப்பிற்றியக்ஹொடவை சந்திப்பதற்கெனச் சென்ற குழுவில் அவருடைய மூத்த சகோதரன் உட்பட்ட உறவினர்கள் அடங்குவர்.

இக்குழுவினர், கிளிநொச்சி புறப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் சுகவீனம் உற்றபோது அரசு கவனம் செலுத்தியமையைக் கருத்திற்கொண்டு, தமது மகனையும் விடுதலை செய்வதற்கு விடுதலைப்புலிகள் கருணைகாட்டவேண்டும் என்று பந்துஜீவவின் தாயார் தெரிவித்துள்ளார். (ஐ-12)

## பள்ளிமுனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னார் ஆயர் இல்லத்தில் நேற்று உயர்மட்ட மாநாடு ஒன்று கூட்டப்பட்டது.

ஆயர் அதிவண ராயப்பு ஜோசப் தலைமையில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் மன்னார் மாவட்ட கடற்படை அதிகாரி புத்திக குணவர்த்தனா, தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் விநோதரராதலிங்கம், அரச அதிபர் எம்.விஸ்வலிங்கம், மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை இன்று முதல் மீன் பிடிக்க அனுமதிப்பது என்றும் -

காலக் கிரமத்தில் இரவு மீன்பிடி குறித்து தீர்மானம் எடுப்பது என்றும் - மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

கரை வலை தொழில் செய்யவும், கணவாய் பிடிக்கவும் அனுமதிப்பது என்றுமுடிவு செய்யப்பட்டுள்ளது. (1

## அரியாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னணி என்று ஒரு தகவல் தெரிவித்தது.

பிரதேச மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி மணல் அகழ்ந்து வந்தகுழுவைச் சேர்ந்தவர்களே வெட்டிக் கொல்லப்பட்டவர்கள் என்றும் கூறப்படுகிறது.

(ஐ-1-30-190-202)

## ரயில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக பேருவளைப் பொலிஸார் தெரிவித்[illegible]ர்.

மாத்தறையில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலே மோட்டார் சைக்கிள் மீது மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-12)

**Vacancy**

எமது நிறுவனத்துக்கு பின்வருவோர் தேவை

- Computer Instructor
- Computer Typist

வயது எல்லை 20-30
தகுதி, அனுபவம், திறமைகளுக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.
விண்ணப்பிக்க விரும்புவோர் 01-08-2006 இற்கு முன்னர் Bio-Data ஐ தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

**C.B Computer Academy**
T.P 021-4590291 Station Road, Kondavil

**சதுரங்கப் போட்டி - 2006**

காலம் : 22.07.2006 சனிக்கிழமை
நேரம் : 8.30
(CHESS Board கொண்டுவரவும்)
06 ஆம் பக்கம் பார்க்கவும்

## மரண அறிவித்தல்

### திருமதி சிவஞானபூரணி வைத்தியலிங்கம்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், பிறவுண் வீதி, நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானபூரணி வைத்தியலிங்கம் அவர்கள் நேற்று (15.07.2006) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு வைத்தியலிங்கம் (உரிமையாளர் வைத்தியலிங்கம் மரக்காலை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், திருநிலைநாயகி, கே.வி.மகேந்திரன் (சட்டத்தரணி), விமலநாயகி, சொரூபராணி, தவராணி, கமலராணி, இந்திராணி, கே.வி.சுசீந்திரன் (வைத்தியலிங்கம் சக சிறுவனம்), கே.வி.இரவீந்திரன் (கே.வி.ஆர். சென்றர்) ஆகியோரின் அன்பு தாயும், காலஞ்சென்ற கீர்த்திசிங்கம், காலஞ்சென்ற சிவராஜா, கனகரட்ணம், துவாரகன், சண்முகலிங்கம், சிறீஸ்கந்தராஜா, நந்தினி, பத்மலோஜினி, ஆகியோரின் அன்பு மாமியும், சசிகலா, சந்திரிகா, மோகனதாஸ், மகிந்தன், சாந்தினி, சேனாதிபதி, நரேஷ், நரேந்திரா, உமா, செந்தூரன், சைலேந்திரன், ஆரூரன், பிரதாயினி, பிரசாந்தன், பிரகலாதன், பிரவீன், அபிராமி, சஞ்சீவன், சரண்யா, வர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.07.2006) திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கொண்டுவரப்படும்.

இறுதிக்கிரியை பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*110, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*021 222 6999.*

(சி-50254)

தகவல்:
மக்கள், மருமக்கள்.

நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த நூறு வீதம் OPCயை உள்ளடக்கிய போட்லாண்ட் சீமெந்தும்
SLS 107 தரம் கொண்டதுமான ராம்கோ சீமெந்து பாவித்து ரூபா 80/- ஐ மீதப்படுத்துங்கள்
கட்டட ஒப்பந்தகாரரே நீங்கள் 100/- நூறு ரூபாவை மீதப்படுத்துங்கள்!
(52309)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.07.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவிப்பணம் கொடுப்பனவு

தென்மராட்சி,ஜூலை17

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர், காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர் ஆயோருக்கான ஜூலை மாதத்திற்குரிய கொடுப்பனவு அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்குப் பிரதேச செயலகச் சமூக சேவைகள் பிரிவினரால் அனுப்பிவைக் கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் இக்கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (117)

## பாலங்கள் புனரமைப்பு

தென்மராட்சி,ஜூலை17

சரசாலை - பருத்தித்துறை வீதியில் சரசாலை கொம்பிக்குளம் மயானத்திற்கு அருகில் உள்ள இரு பாலங்கள் புனரமைப்பதற்காகத் தற்காலிக பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இவ்வீதியில் சேதமடைந்த நிலையில் மேலும் இரு பாலங்கள் காணப்படுகின்ற போதிலும் அவற்றைப் புனரமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாதது குறித்து வாகனச் சாரதிகள் கவலை தெரிவித்தனர். (117)




## நிதி ஒதுக்கீடு

நல்லூர்,ஜூலை17

வேலணை பிரதேச சபைக்குப் புதிய டிரக்டர் மற்றும் பௌசர் கொள்வனவு செய்வதற்கென மஹிந்த சிந்தனை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தேச நிர்மாண அபிவிருத்தி அமைச்சு 23 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதேவேளை நயினாதீவு வீரபத்திரர் வீதி, முருகன் கோயில் வீதி, விநாயகர் வீதி ஆகியவற்றின் திருத்த வேலைகளுக்கென மஹிந்த சிந்தனை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தலா ரூபா 5 லட்சம் வீதம் நிதி வழங்கப்பட்டுள்ளது. (111)

## அராலியில் ஆடிவிழா

அராலி,ஜூலை17

அராலி தெற்கு களுவத்துறை விளையாட்டுக்கழகம் நடத்தும் 59ஆவது ஆடி விழா நிகழ்வு இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு களுவத்துறை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சங்கானைப் பிரதேச செயலர் திருமதி பாபு மற்றும் சுயாதீன மனித உரிமைகள் வடமாகாணப் பணிப்பாளர் மோகன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக சமாதான நீதிவான் ப.சிவலோகநாதக் குருக்கள், ஓய்வுபெற்ற தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் சு.செந்தில்நாதன், ஓய்வுபெற்ற அதிபர் வீ. சிவஞானபோதன் மற்றும் சமாதான நீதிவான் வி.செல்வரட்ணம் ஆகியோரும் கலந்துகொள்வர். (1)

## றோணியோ இயந்திரத்தை பயன்படுத்த முடியாத நிலை

வலி. வடக்கு, ஜூலை17

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையில் றோணியோ இயந்திரம் இருந்தும் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

உடுவில் கோட்ட அலுவலகத்தில் பயன்பாட்டில் இருந்த றோணியோ இயந்திரமே குறிப்பிட்ட பாடசாலைக்கு வழங்கப்பட்டது என்றும் -

இவ்வாறு வழங்கப்பட்ட றோணியோ இயந்திரத்தை இரண்டாயிரத்து அறுநூறு ரூபா செலவுசெய்து திருத்தம் செய்தபோதிலும், அதனை இயக்கமுடியவில்லை என்றும் -

குறிப்பிட்ட இயந்திரத்தைப் பயன்படுத்துவதனால் ஏற்கனவே செலவு செய்த பணத்துக்கு மேலதிகமாக சுமார் 7ஆயிரம் ரூபாவை செலவு செய்யவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (86)

## குளம் புனரமைப்பு

நவாலி,ஜூலை17

ஆனைக்கோட்டை, வியாவில் குளம் உலக உணவுத் திட்டத்தின் கீழ் தற்போது ஆழமாக்கப்பட்டு வருகின்றது.

உடுவில் கமநல சேவை நிலையத்தின் மேற்பார்வையில் ஆனைக்கோட்டை விவசாய சம்மேளனத்தினால் நாற்பதிற்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் உதவியுடன் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (100)

# வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக புதிய நிர்வாகிகள் பதவியேற்பு

வலி.தென்மேற்கு,ஜூலை17

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் 2006-2007 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையின் உத்தியோகபூர்வ பதவி ஏற்பு வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

இவ்வைபவத்தின்போது பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்திற்கும், சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயத்திற்கும் அப்பியாசக் கொப்பிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டதுடன், கண்பார்வை குறைந்த - வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களிற்கு மூக்குக்கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட லயன்ஸ் வடக்கு பிராந்தியச் செயலர் லயன் டாக்டர் வி.யோகேஸ்வரன், லயன் டாக்டர் எஸ்.சதாசிவம் தலைமையிலான புதிய நிர்வாகசபை உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

கழகத்தின் செயலாளராக லயன் வி.ஆர். கனகராஜாவும், பொருளாளராக லயன். ஆர். பொன்னுராஜாவும் பதவி ஏற்றுள்ளனர்.

இவ்வைபவத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (1-135-ரி)

## 'பொலிவு' வெளிவந்தது

யாழ்ப்பாணம்,ஜூலை17

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் அபிவிருத்திக்கான மாத இதழாக வெளியிடப்பட்டுவரும் 'பொலிவு' 11ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

முற்றுமுழுதாகப் பெண்ணியம் சார்ந்த கருத்துக்களை முதன்மைப்படுத்தி வெளிவந்துள்ள இந்த இதழ் கவிதைகள், கட்டுரைகள், கதைகள், மருத்துவ விடயங்கள் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. (ரி)

# தச்சன்தோப்புப் பகுதியில் கசிப்பு விற்பனை தீவிரம்

கைதடி,ஜூலை17

சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் தச்சன்தோப்பு மற்றும் வேலம்பிராய் பகுதிகளில் மிகத் தீவிரமாக இடம்பெற்றுவருவதாக அப்பகுதி மக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

தினமும் பெருமளவு கசிப்பு அப்பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுவதோடு அங்கு பல இடங்களில் மிகப்பகிரங்கமாக அது விற்பனை செய்யப்பட்டுவருவதாகவும் கூறப்படுகின்றது.

இத்தகைய சட்டவிரோத விற்பனையால் அப்பகுதிகளில் தினமும் சண்டை சச்சரவுகள் இடம்பெறுவதாகவும் அத்தோடு பாடசாலை செல்லும் மாணவர்கள் வீதிகளால் செல்ல அச்சப்படுவதாகவும் அறிய முடிகின்றது.

எனவே சம்பந்தப்பட்டோர் இவ்விடயத்தில் கவனமெடுத்து இவற்றை உடன்நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

அண்மைக்காலமாக கைதடிப் பகுதியிலும் கசிப்பு விற்பனை மிகத்தீவிரமாக இடம்பெறுவதாகவும் - இங்கு விற்பனைக்கென உரும்பிராய்ப் பகுதியிலிருந்து இக்கசிப்பு தருவிக்கப்படுவதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது. (1-75)

# வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு வதிவிடங்களை அமைக்க 'கியூடெக்' உதவி

யாழ்ப்பாணம்,ஜூலை17

வறுமைக்கோட்டின் கீழ்வாழும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கும் பல வருடங்களாக இந்தியாவில் அகதிகளாக இருந்து மீளக்குடியமர்ந்துவரும் குடும்பங்களுக்கும் 'கியூடெக்' நிறுவனம் வதிவிடங்களை அமைப்பதற்கான உதவிகளை வழங்கி வருகிறது.


கடந்த வருடம் இந்தியாவிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்த 42 குடும்பங்களிற்கு ஒரு மில்லியன் பெறுமதியான கட்டடப் பொருள்கள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடமைப்பிற்காகக் கூரைத்தகடுகள், மரங்கள் சீமெந்து மற்றும் ஏனைய கட்டடப் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 35 குடும்பங்களிற்கு அவர்களின் குடிசை வீடுகளைத் திருத்தியமைப்பதற்காக 88 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியுடைய கிடுகுகள் வழங்கப்பட்டன.

இவ்விரு உதவித்திட்டங்களுக்குமான பயனாளிகள் மாதகல், அரியாலை, கொழும்புத்துறை, குருநகர், நீர்வேலி, இளவாலை, நல்லூர், பாசையூர், கோப்பாய் போன்ற பகுதிகளிலிருந்தே தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்தக் கட்டட வேலைகள் ஒவ்வொரு பயனாளியின் குடும்பங்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டதாக 'கியூடெக்' நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி)



இந்தியாவில் இருந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்காகப் புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பினால் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்பட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் கலந்துகொண்ட புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பின் அதிகாரிகள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும் -

புதிதாக அமைக்கப்பட்ட வீடு ஒன்றினைப் புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பின் அதிகாரி எச்.ஏ.அருள்ஞானம் நாடாவெட்டித் திறந்து வைப்பதனை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

*(படங்கள்: தமிழினியன்)*

# மீன் மற்றும் இறைச்சி வகைகளை பாதுகாப்பாக விற்பனை செய்ய நடவடிக்கை

தென்மராட்சி,ஜூலை17

வியாபார நிலையங்கள் மற்றும் சந்தைகள் ஆகியவற்றில் திறந்த நிலையில் இறைச்சி மற்றும் மீன்வகைகள் விற்பனை செய்வதைத் தடைசெய்யுமாறு வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சகல உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்கள், சந்தைகள் ஆகியவற்றில் பாதுகாப்பான நிலையில் இறைச்சி மற்றும் மீன்வகைகள் விற்பனை செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இறைச்சி வகைகளைத் திறந்த நிலையில் வைத்திருப்பதைத் தவிர்த்து கண்ணாடிப் பெட்டிகளில் வைத்து விற்பனை செய்வதற்கு அறிவுறுத்துமாறும் அவர் உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார். (117)

## நன்கொடை

யாழ்ப்பாணம்,ஜூலை17

2005 - 2006 ஆம் ஆண்டிற்கான பொது நூலகம், பொது மலசல கூடம், தாய் சேய் நல சிகிச்சை, சனசமூக நிலையம் ஆகிய 4 திட்டங்களுக்கு விரைவில் நன்கொடை நிதி வழங்கப்படவுள்ளது.

மூலதன நன்கொடை நிதிமூலம் வடக்கு- கிழக்கில் உள்ள 71 உள்ளூராட்சி சபைகளுக்கும் வழங்கப்படவுள்ளது. (185)

## இலவச வகுப்புகள்

வலி.தென்மேற்கு,ஜூலை17

நற்கருணை ஆண்டவர் சபை சில்லாலை தெய்வீக மருத்துவர் இல்ல கட்டடத்தில் சில்லாலையைச் சேர்ந்த மாணவர்களின் நலன் கருதி கணனி பயிற்சி மற்றும் ஆங்கில மொழி வகுப்புகளை அண்மையில் ஆரம்பித்துள்ளது. இலவசமாக இப்பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

# சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை நிதி வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை17

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு 2004ஆம் ஆண்டுக்குரிய நன்கொடை நிதி வழங்கப்படவுள்ளது.

சனசமூக நிலையத்தினால் கடந்த 2004 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்ற கூட்டங்களில் அறிக்கைப் பதிவேடு, பொருளாளரினால் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவு அறிக்கை, நிலைய [illegible] பொருள் [illegible] சிகைகள் ஆகியவற்றின் பதிவேடு, குறிப்புப் பதிவேடு, அங்கத்தவர் பதிவேடு, 2006 ஜூன் வரையிலான வங்கிக் கணக்குப் பதிவேடு, நிலையத்தினால் வழங்கப்படும் சேவைகளும் மேற்கொள்ளப்படும் பணிகளின் தொகுப்பும் அடங்கிய விவரங்கள், உப குழுக்கள் இருப்பின் அவை பற்றிய விவரங்கள் ஆகியவற்றை நகரசபையில் சமர்ப்பிக்குமாறு சனசமூக நிலையங்களின் [illegible]ருக்கு நகரசபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (117)

## கால்நடைகளால் தொல்லை

நவாலி, ஜூலை17

நவாலி ஆனைக்கோட்டைப் பகுதியில் தற்போது கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

கால்நடை உரிமையாளர்கள் கால்நடைகளைக் கட்டி வளர்க்காததால் வீதிகளில் அலையும் மாடுகள் வேலிகளை சேதப்படுத்தி உள்நுழைந்து பயன் தரும் மரங்களையும் அழித்து வருகின்றன. (100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org